# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

## தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2018

TE-18-D-2 பாரிசு, 05-01-2018

## தேர்வு தொடர்பான விதிமுறைகளும் நடைமுறைகளும் *

(முதன்முறை தனியாராக தோற்றும் மாணவர்களுக்கானது)

### 01. தேர்வு முறைகள்

வளர்தமிழ் - 1 தொடக்கம் வளர்தமிழ் - 12 வரையான மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வுடன் புலன்மொழிவளத் தேர்வும் நடைபெறும். இரண்டு தேர்வுகளுக்கும் தோற்றும் நிலையிலேயே மாணவரின் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு முழுமையடைகிறது.

**புலன்மொழிவளத் தேர்வு :**

- வளர்தமிழ் - 1 தொடக்கம் வளர்தமிழ் 10 வரையான மாணவர்களுக்கு கேட்டல், பேசுதல், வாசித்தல்
- வளர்தமிழ் - 11, 12 மாணவர்களுக்கு பேசுதல், வாசித்தல் (கேட்டல் பகுதி இல்லை)

**புலன்மொழிவளத் தேர்வு நாட்கள்**

- **05-05-2018** சனிக்கிழமை
- **06-05-2018** ஞாயிற்றுக்கிழமை
- **13-05-2018** ஞாயிற்றுக்கிழமை

ஆகிய மூன்று நாட்களில் ஏதாவது ஒரு நாள், நேரம், இடம் என்பன புலன்மொழிவளத் தேர்விற்காகத் தங்களுக்காக தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் ஒதுக்கப்படும். **புலன்மொழிவளத் தேர்வு நாள், நேரம், இடம் என்பவற்றில் எதுவிதமாற்றமும் செய்ய முடியாது.**

**எழுத்துத்தேர்வு : 02-06-2018 சனிக்கிழமை**

வளர்தமிழ் 1 தொடக்கம் 12 வரையான மாணவர்களுக்கு ஒரே நாளில் எழுத்துத் தேர்வு நடைபெறும். ஆனால் நேரங்கள் மாறுபடும். தேர்வு நேரம் தொடர்பான தகவல் பின்னர் அறிவிக்கப்படும் (தேர்வு அனுமதிக் கடிதத்தினூடாக)

### 02. விண்ணப்ப முடிவு நாள் : 17-02-2018.

### 03. கட்டண விபரங்கள் :

வளர்தமிழ் 1 தொடக்கம் 4 வரை 40 €

வளர்தமிழ் 5 தொடக்கம் 12 வரை 50 €

### 04. விண்ணப்ப படிவத்தை பெறுதலும், நிரப்புதலும்

தேர்வு விண்ணப்பப்படிவத்தை தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது **www.tamoulcholai.fr** என்ற எமது இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். தேர்வு விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள தகவல்களை **நீலம் அல்லது கறுப்பு எழுதுகோலினால் தெளிவாக, தனித்தனி எழுத்துகளால்** நிரப்பவும். விண்ணப்பப் படிவத்தில் பிள்ளையின் அண்மைக்கால ஒளிப்படத்தை ஒட்டவும். பிள்ளையின் வயதை உறுதிசெய்ய பிறப்புச் சான்றிதழ் அல்லது அடையாள ஆவணம் ஒன்றின் பிரதியை இணைக்கவும்.

ம.ப.பா

## 05. விண்ணப்பங்களை அனுப்புதல் தொடர்பான தகவல்கள்

உங்கள் விண்ணப்பங்களை தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது தபால் மூலமும் அனுப்பலாம். நேரடியாக ஒப்படைப்பதாயின் பணியக நேரத்தினைக் கவனத்தில் கொள்ளவும். கட்டணத்தைக் காசாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தலாம். வங்கியட்டை மூலம் கட்டணம் செலுத்த முடியாது.

தபால் மூலம் அனுப்புவதாயின் **TAMOULCHOLAI ASSOCIATION** எனும் பெயரில் வரையப்பட்ட காசோலையினை இணைத்து அனுப்பவும்.

தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பற்றுச்சீட்டு எம்மால் அனுப்பி வைக்கப்படும்.

**தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு மேலதிகமாக 15€ செலுத்துதல் வேண்டும்.**

## 06. தேர்வு அனுமதிக் கடிதம்

புலன்மொழி வளத்தேர்விற்கும் எழுத்துத் தேர்விற்குமான தனித்தனி அனுமதிக் கடிதங்கள் 14-04-2018 இற்கு முன் கிடைக்கக் கூடிய வகையில் தங்கள் முகவரிக்கு எம்மால் அனுப்பி வைக்கப்படும். தபால் மூலமான காலதாமதங்களுக்கும் தொலைந்துபோதல்களுக்கும் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் பொறுப்புக்கூற மாட்டாது. 14-04-2018 இற்குள் தேர்வு அனுமதிக் கடிதம் கிடைக்கவில்லையெனின், தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் அதன் பிரதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## 07. தேர்வுகள் நடைபெறும் இடம், நேரம்

தேர்வுகள் நடைபெறும் இடம், நேரம் பற்றிய முழுமையான தகவல்கள் தேர்வு அனுமதிக் கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பப்படும். புலன்மொழிவளத் தேர்விற்கு **30 நிமிடங்கள்** முன்னதாகவும், எழுத்துத் தேர்விற்கு **45 நிமிடங்கள்** முன்னதாகவும் மண்டபத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

எழுத்துத் தேர்வு ஆரம்பித்து **30 நிமிடங்களுக்கு மேல் தாமதமாக வரும் மாணவர்கள்** தேர்வு மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## 08. தேர்விற்கான சீருடை

தேர்வுகளில் பங்குபற்றும் மாணவர்கள் கறுப்புநிற நீளக்காற்சட்டையும் தனிவெள்ளை மேற்சட்டையும் அணிதல் வேண்டும்.
(தேர்வு மண்டபத்தில் மாணவர்களை இலகுவாக இனங்காண்பதன் பொருட்டு)

## 09. தேர்விற்கு மாணவர்களை அணியஞ் செய்தல்

தேர்வுகள் யாவும் வளர்தமிழ் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், இறுவட்டுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். தேர்விற்கு மாணவர்களை அணியஞ்செய்தற் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களைப் பெற விரும்பின் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

## 10. தேர்வுப் பெறுபேறுகள்

தேர்வுப் பெறுபேறு 31-08-2018 இற்கு முன் தங்களுக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பிவைக்கப்படும். பெறுபேறு தொடர்பாக மீளாய்விற்கு விண்ணப்பிக்க முடியும். மீளாய்வு தொடர்பான விபரங்கள் தேர்வுப் பெறுபேற்றுடன் இணைக்கப்படும்.

*** தவிர்க்கமுடியாத, அசாதாரண சூழ்நிலைகளால் மாற்றங்களுக்கு உட்படக்கூடும்**

**நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம் Notre langue maternelle est la racine de notre bien être**